**விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி**

**வகுப்பு : 12** **பாடம் : தமிழ்**

**DATE: 30 – August – 2021** **T – 33** **No. of Pages: 05**

# மொழியை ஆள்வோம்

**சான்றோர் சித்திரம்:**



சோமசுந்தர பாரதியார்
(1879 – 1959)

ஒருமுறை எட்டயபுரம் அரண்மனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு புலவர் வந்திருந்தார். அரண்மனை அவையில் நடந்த புலவர் கூட்டத்தில் ஈற்றடி ஒன்றைக் கொடுத்துப் பாடல் ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டினார். அக்கூட்டத்திற்கு இரண்டு நண்பர்கள் சென்றிருந்தனர். பலரும் பாடல் இயற்றிக் கொடுக்க அனைத்துப் பாடல்களிலும் நண்பர்கள் இருவரின் பாடல்களே சிறந்ததெனத் தேர்ந்தெடுத்த அப்புலவர், இருவருக்கும் 'பாரதி' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தார். அவ்விருவரில் ஒருவர் சுப்பிரமணிய பாரதியார் ,மற்றொருவர் சோமசுந்தர பாரதியார்.

பேச்சாளர், சமூக சீர்திருத்தவாதி, விடுதலைப் போராட்ட வீரர், இலக்கிய ஆய்வாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட நாவலர் சோமசுந்தர பாரதியார், சிறந்த வழக்கறிஞராக திகழ்ந்தார். வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு வ.உ.சி .யின் அழைப்பை ஏற்று 100 ரூபாய் சம்பளத்தில் சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். என்னிடம் இரண்டு சரக்குக் கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க் கப்பலும் உள்ளது என்று வ.உ.சி பெருமிதத்துடன் இவரைக் குறிப்பிடுவார். இவர் தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னின்று செயலாற்றியவர். தசரதன் குறையும் கைகேயி நிறையும், திருவள்ளுவர், சேரர் தாயமுறை, தமிழும் தமிழரும் முதலிய பல நூல்களை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகியவற்றுக்கு

உரை எழுதியுள்ளார். இவர் சமூக சீர்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டு சடங்குகள் இல்லாத திருமண விழாக்களை முன்னின்று நடத்தினார்.

வ.உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் அவர்களுக்காக இவர் வாதாடியது குறிப்பிடத்தகுந்தது. அவருடைய தீந்தமிழுக்குச் சான்று . கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு, எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது.இயல் வழக்கில்லா அருஞ்சொற்களும் பொருள் பல குறித்து மருள வைக்கும் பொதுச் சொற்களும் விரவும் நடையைச் செய்யுள் வழக்கில் ஒருவரும் விரும்பார். எளிமையும் தெளிவும் எழுத்திலும் பேச்சிலும் எம்மொழி மொழி நடைக்கும் இனிமையும் எழிலும் என்றும் உதவும் என்பது எல்லாருக்கும் உடன்பாடு"

1.' பாரதி' என்ற பட்டத்தைப் பெற்ற இரு நண்பர்கள் யாவர்?

பாரதி என்ற பட்டத்தைப் பெற்ற இரு நண்பர்கள் சுப்ரமணிய பாரதியார், சோமசுந்தர பாரதியார் .

2. நாவலர் சோமசுந்தர பாரதியார் கொண்டிருந்த பன்முக ஆளுமைகள் யாவை?

நாவலர் சோமசுந்தர பாரதியார் கொண்டிருந்த பன்முக ஆளுமைகள்

- பேச்சாளர்
- சமூக சீர்திருத்தவாதி
- விடுதலைப் போராட்ட வீரர்
- இலக்கிய ஆய்வாளர்

3. 'ஒரு தமிழ்க்கப்பல்' என வ.உ.சி. ஆல் பெருமிதத்துடன் குறிப்பிடப்பட்டவர் யார்?

சோமசுந்தர பாரதியார்

4.சோமசுந்தர பாரதியார் இயற்றிய நூல்கள் யாவை?

- தசரதன் குறையும் கைகேயி நிறையும்,
- திருவள்ளுவர்
- சேரர் தாயமுறை
- தமிழும் தமிழரும் ஆகியனவாகும் .

5. சோமசுந்தர பாரதியார் வாதாடிய நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்கது எது?

வ.உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் இவர் வாதாடியது குறிப்பிடத்தக்கது.

**தமிழாக்கம் தருக:**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it did not rest. until he had found a permanent solution to it. Communal differences in society were deep-tooted and appeared to be permanent features of our society. until Periyar came on the scene.

**விடை** :

பெரியார் ஒரு சிறந்த சமூகப் புரட்சியாளர் மட்டுமல்ல. அதைவிட மேலான பல தளங்களில் இயங்குபவர். சமூகத்திலுள்ள விளிம்புநிலை மக்களின் உரிமைக்காக பெரும் பங்காற்றியவர். அவரது சமூக செயல்பாடுகள் மிகவும் பரந்தது. சமூகத்தில் நிலவிவந்த ஏற்றத்தாழ்வுகளை முழுவதுமாக ஆராய்ந்து அதன் கூறுகளை புரிந்து அதற்கு நிரந்தர நிறைவும், நிரந்தர தீர்வு கண்டவர். பெரியார் வருகைக்கு முன் நமது சமூகத்தின் சாதிய ஏற்றத்தாழ்வு புரிந்தது அது நிரந்தரமாக மக்களை வேற்றுமைபடுத்தியது.

**பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

1. இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சுக்கோ

**விடை** : இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்து கொள் ..

2. நிலத்தைக் கெள!ளே₹னும் டா அப்பதான் வயிறு நிறையும் .

**விடை**: நிலத்தைக் கிளற வேண்டுமடா!அப்போது தான் வயிறு நிறையும்.

3. அண்ணைக்கு அவனுக்குப் பணம் கோடுத்து ஒதவியிருக்க வேண்டியது தானே

**விடை**: அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியது தானே

4. வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்திகினு போனாரு.

**விடை**: வீட்டின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை அப்பா எங்கே இழுத்துக் கொண்டு சென்றார்.

5. புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

**விடை**: குழந்தை உடல் நலக் குறைவால் மூன்று நாள்களாகச் சிரமப்பட்டுக் கொண்டுள்ளது.

6. ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவச் சொல்

**விடை**: இரவில் சித்தப்பாவைக் காவல் காக்கச் செல்லுமாறு சொல்.

**பிறமொழிச் சொற்களை கண்டறிந்து தமிழ்ப்படுத்துக** :

1. சர்க்கார் - அரசு
2. அவகாசம் - வாய்ப்பு
3. ஜீவனம் - வாழ்க்கை
4. ஆத்மா - உயிர் .
5. சக்தி - ஆற்றல்
6. அம்சம் - அழகு,பகுதி
7. சம்பளம் - ஊதியம்
8. மனுஷன் - மனிதன்
9. பிரபஞ்சம் - உலகம்
10. ஆத்மவிசாரம் - மனக்கவலை
11. ஸ்புடம் - சோதனை, தரம்பிரித்து
12. மனுசவர்க்கம் - மனிதக் கூட்டம்
13. மாயை - மாயத்தோற்றம்

**கலைச்சொல்** :

Affidavit - ஆணை உறுதி ஆவணம்

Allegation - சாட்டுரை

Conviction - தண்டனை

Jurisdiction - அதிகார எல்லை

Plaintiff - வாதி

**விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி**

**வகுப்பு : 12** **பாடம் : தமிழ்**

**DATE: 30 – August – 2021** **T – 33** **No. of Pages: 05**

**கருத்துப் படத்தை புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக :**




| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

தமிழில் உள்ள சங்க இலக்கியங்கள் இரு வகைப்படும். அவை எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பனவாகும். எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களும் அகப்பொருள் சார்ந்தவையாகும். புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டு நூல்களும் புறப்பொருள் சார்ந்தவையாகும். பரிபாடல் என்ற நூல் மட்டும் அகம், புறம் இரண்டும் சார்ந்த நூலாகும். பத்துப்பாட்டு நூல்களுள் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை என்ற நான்கு நூல்களும் அகப்பொருள் பற்றியன. மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, ஆகிய ஆறு நூல்களும் புறப்பொருள் பற்றியனவாகும்.